முக்கிய வார்த்தைகள்:
ரமதான்
தயாரிப்பு
மாற்றம்
மாற்றியமைத்தல்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**13 பிப்ரவரி 2026 / 25 ரஜப் ஹிஜிரி 1447**

# ரமதானின் வருமையும் தயாரிப்பு செய்து கொள்வதன் அவசியமும்

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى ٱللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! நாளைக்கு நாம் உயிரோடு இருப்போம்; அதற்கு உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணமானது நம்மை ஏமாற்றி விட வேண்டாம். காரணம், இவ்வுலக வாழ்க்கையில் மரணம் என்பது உறுதியான விஷயமாகும்.

**அன்பும் மரியாதையுமிக்க ஜமாஅத்தார்களே!**

புனிதமிக்க **ரமதான்** மாதம் நம்மை வேகமாக நெருங்கி வருகிறது. இந்த **ரமதான்** நமது இறுதி ரமதானாக இருக்க வாய்ப்புள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பை நாம் வீணாக்கி விடக்கூடாது. ஆன்மீகம் மற்றும் உடலியல் ரீதியிலான **தயாரிப்புகளுடனும்**, நேர்மையான எண்ணத்தால் நாம் வழிகாட்டப்பட்ட நிலையிலும் **ரமதான்** மாதத்தை வரவேற்போமாக. இது சம்பந்தமாகவே, இன்றைய "குத்பா" பிரசங்கத்தில் இன்ஷாஅல்லாஹ் கவனம் செலுத்தப்படும். **ரமதானை** வரவேற்பதற்கு நாம் எந்தளவு **தயாரிப்புடன்** இருக்கின்றோம்? என நம்மை நாம் கேட்டுக் கொள்வோமாக!

நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், நம்மை எப்போதும் **தயாரிப்பு** நிலையில் வைத்துக் கொள்ள வேண்டுமென அடிக்கடி நினைவூட்டப் படுகிறோம்; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தின் 18-வது வசனத்தில் கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَلۡتَنظُرۡ نَفۡسٞ مَّا قَدَّمَتۡ لِغَدٖۖ وَٱتَّقُواْ ٱللَّهَۚ
إِنَّ ٱللَّهَ خَبِيرُۢ بِمَا تَعۡمَلُونَ ١٨

பொருள்: "ஈமான் கொண்டவர்களே [ஓரிறை நம்பிக்கையாளர்களே!] அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; மேலும், ஒவ்வொருவரும் [மறுமை] நாளுக்காக, தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்; இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; நீங்கள் செய்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்"

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

நாம் **ரமதானுக்காக** மிகத் தாமதமாகத் **தயாரிப்புச்** செய்துள்ளோமா? **ரமதான்** வருவதற்கு முன்பாக இன்னும் நாம் எவ்வாறு நம்மைத் **தயார் செய்து கொள்வது?** என நாம் நினைக்கலாம். இது சம்பந்தமாக சிந்தனை செய்வதற்கு, இன்றைய "குத்பா" பிரசங்கத்தில் இரண்டு முக்கிய விஷயங்கள் உங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

**முதலாவதாக: தள்ளிப் போடக் கூடாது.**

நம்மில் சிலர், **ரமதான்** மாதம் வரட்டும் அப்போது நமது நற்காரியங்களை அதிகரித்துக் கொள்ளலாம்; நமது தீய செயல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நற்காரியங்களைச் செய்வதையும் தீய செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதையும் நாம் தொடர்ந்து தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது. காரணம், **ரமதான்** மாதத்தை நாம் அடையும் முன்பு நமக்கு மரணம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது? ”நற்காரியங்களைச் செய்வதற்கும் தீய செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் **”ரமதான்** மாதத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்” அதற்குள் எனக்கு மரணம் நிகழ்ந்து விட்டது” என மறுமை நாளில் அல்லாஹ்விடம் நாம் சாக்குப் போக்கு கூற முடியுமா? நாளைய தினம் நமக்கு நிச்சயமற்ற தினமாக இருக்கும் நிலையில், அதன் மீது நம்பிக்கைக் கொண்டு, பாவமன்னிப்புத் தேடுவதையும், நமது சுய-முன்னேற்றத்தையும் பிற்படுத்துவதானது முறையான விஷயமல்ல.

எனவே, நமது தொழுகைகளின் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கும் அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா உடனான நமது தொடர்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் இந்த நிமிடத்திலிருந்தே முயற்சி செய்யுங்கள்; திருக்குர்ஆனை ஓதி, அதில் சிந்தனை செய்வதற்கு நேரத்தை ஒதுக்குங்கள்; தீய பழக்க, வழக்கங்கள் மற்றும் முறையற்ற நடத்தைகள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள முயலுங்கள்.

சகோதரர்களே! **ரமதானுக்கானத் தயாரிப்பை** புதிய பிறை தென்பட்டவுடன் ஆரம்பிக்கலாம் என்று இருந்து விடக் கூடாது. இன்று நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றத்திலிருந்தே அதற்கானத் தயாரிப்பை ஆரம்பம் செய்து விட வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள்! **ரமதான்** மாதமானது, வணக்க வழிபாட்டிற்கான மாதம் மட்டுமல்ல; மாறாக, அத்துடன், ஆன்மீக ரீதியிலும் ஒழுக்க

மாண்புகளின் ரீதியிலும் மீதமுள்ள வாழ்நாட்களுக்காக பயிற்சி எடுக்கப்படும் மாதமாகும். நமது நோக்கம் **நீடித்த மாற்றத்தை** ஏற்படுத்திக் கொள்வதாகும்; தற்காலிகமான செயல் நோக்கமல்ல.

**இரண்டாவதாக: தெளிவானத் திட்டங்களையும் நோக்கங்களையும் கண்டறிவது.**

நமது இலக்குகளையும் திட்டங்களையும் தெளிவாகவும் அறிவுப்பூர் வமாகவும் அமைத்துக் கொள்ள வேண்டும். **ரமதான்** வரையறுக்கப்பட்ட நாட்களைக் கொண்ட மாதமாகும்; அதன் நேரங்கள் விலைமதிக்க முடியாத உயர்ந்தவையாகும். எனவே, நமது பேச்சில் நாம் அதிகக் கவனமுள்ளவர்களாக ஆக வேண்டும் என நாம் விரும்பவில்லையா? கடினமானக் காலங்களிலும் எளிதான, இலகுவானக் காலங்களிலும் நமது ஆசைகளையும், விருப்பங்களையும் நம்மால் கட்டுப்படுத்த முடியும் என நாம் நம்புகிறோமா? என நம்மை நாம் இப்போதே கேட்டுக் கொள்ள வேண்டும்.

இப்புனிதமிக்க மாதத்தில் நமது ஆன்மீக ரீதியிலான நோக்கங்கள் யாவை? தொழுகைகளை பள்ளிவாசல்களில் ஜமாஅத்துடன் தொழுகலாம் எனும் நோக்கத்தில் இருக்கின்றோமா? அல்லது வீட்டில் குடும்பத்தாருடன் தொழுது கொள்ளலாம் என நினைக்கின்றோமா? திருக்குர்ஆனை இம்மாதத்தில் முழுமையாக ஓதி விட வேண்டும்; "கியாமுல் லைல்" எனப்படும் இரவுத் தொழுகைகளை தொழுக வேண்டும் எனும் விருப்பத்தில் இருக்கின்றோமா? மிக முக்கியமாக, இந்நோக்கங்களை நாம் எப்படி அடைந்து கொள்வது? என்றெல்லாம் நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அதே சமயம், நமது வணக்க, வழிபாட்டுச் செயல்களுடன், நமது அன்றாடக் கடமைகளான நமது குடும்பத்தாரைக் கவனிப்பது, நமது வேலைகளில் கவனம் செலுத்துவது, நமது பாடங்களைப் படிப்பதில் சிறப்பாகச் செயல்படுவது ஆகியவற்றையும் சமநிலையாகச் செயல்படுத்துவது எப்படி எனவும் நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் தெளிவாகத் திட்டமிடுவதானது, நமது வணக்க, வழிபாடுகள் மற்றும் பணிகளில் நாம்

தொடர்ந்து கவனம் செலுத்துவதற்கும் **ரமதான்** மாதம் முழுவதும் நாம் நிலைத்தன்மையுடன் இருப்பதற்கும் உதவியாக இருக்கும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

**ரமதான்** மாதமாகிறது, அருள்கள் மற்றும் நமது பாவங்களுக்கான மன்னிப்புகள் வழங்கப்படும் மாதமாக இருக்கின்றது. இம்மாதத்தில் கிருபையின் வாசல்கள் மிகவும் விசாலமாகத் திறக்கப்படுகின்றன; தமது பாவங்களை நினைத்து உளப்பூர்வமாக வருந்துபவர்களுக்கு அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. எனவே, இம்மாதத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள, சரியாகத் திட்டமிடாமலும், அதன் காரணமாக, நம்மில் **உண்மையான மாற்றம்** ஏற்படாத வகையிலும் இம்மாதத்தைக் கடந்து செல்ல விட்டு விடுவதானது, நமக்கு மிகப் பெரிய நஷ்டமாக அமையும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

எனவே, ரமதானுக்காக நம்மை நாம் **தயார் செய்து கொள்வதற்கு** ஆர்வத்துடன் முயற்சிப்போமாக! அப்போது நமது வாழ்க்கையில் வந்து சென்ற அனைத்து **ரமதான்களிலும்** சிறந்த ரமதானாக இந்த **ரமதான்** அமைந்து விடும் இன்ஷாஅல்லாஹ். எல்லாம் வல்ல அல்லாஹ், **ரமதான்** மாதத்தைச் சந்திப்பதற்கான வாய்ப்பையும், அதன் மூலம் சிறப்பாகப் பயன் பெறுவதற்கான வாய்ப்பையும் நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**اللَّهُمَّ بَلِّغْنَا رَمَضَانَ، اللَّهُمَّ بَلِّغْنَا رَمَضَانَ، اللَّهُمَّ بَلِّغْنَا رَمَضَانَ.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.